மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1994) நிறைவேற்றப் பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டமுன்வடிவு, 1994 (ஆ.இ.)

(உ) திருநெல்வேலி மாநகராட்சி சட்ட முன்வடிவு (ஆ.இ.)

(ஊ) சேலம் மாநகராட்சி சட்ட முன்வடிவு, 1994 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு, கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளைப் பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள் :

1. 1994-ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/1994).

2. 1994-ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சி சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1994)

3. 1994-ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1994).